**உதவி அமர்வு நீதிமன்றம், பத்மநாபபுரம்.**

**முன்னிலை : திரு. K. மாரியப்பன், பி.ஏ., பி.எல்.,**

**உதவி அமர்வு நீதிபதி, பத்மநாபபுரம்**

**2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 17–ஆம் நாள் புதன்கிழமை**

**<u>அமர்வு வழக்கு எண்.04/2022</u>**

**(CNR No.TNKK07- 000138-2022)**

(இவ்வழக்கானது முதலில் பத்மநாபபுரம் நீதித்துறை நடுவர் எண்.I நீதிமன்றத்தில் முதல் நிலை விசாரணை பதிவேட்டு வழக்கு எண்.21/2021 ஆக 08.10.2021 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ளது.)

| | | | |
|---|---|---|---|
| 1. | குற்றம் முறையிடுபவர் | : | அரசு சார்பாக காவல் ஆய்வாளர்,<br>திருவட்டார் காவல் நிலையம்,<br>குற்ற எண். 279/2019 |
| 2. | குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்னய், வயது, தந்தை பெயர், முகவரி மற்றும் வேலை. | : | 1. ஓய்சிலின் (வயது 28)<br>த/பெ. ராபின்சன்<br>பிலாவிளை<br>மதுதூர் குறிச்சிவிளை.<br><br>2. ஆனந்த் (எ) அபினாஸ் (வயது 25)<br>த/பெ. பரமேஸ்வரன்<br>வெள்ளிகோடு,<br>காட்டாத்துறை அஞ்சல்.,<br><br>3. செலின் (வயது 32)<br>த/பெ. செல்லம்<br>நெல்லிக்கண் விளை<br>மருதூர்குறிச்சி.<br><br>4. வினு (வயது 26)<br>த/பெ. தங்கநாடார் |

| | | | |
|---|---|---|---|
| | | | காட்டுவிளை,<br>காட்டாத்துறை அஞ்சல்,<br><br>5. விமல், (வயது 25)<br>த/பெ. சுந்தர்ராஜ்<br>மருதூர்குறிச்சி<br>காட்டாத்துறை அஞ்சல். |
| 3. | சம்பவ நாள் | : | 25.08.2019 |
| 4. | காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | : | 29.08.2019 |
| 5. | குற்ற இறுதி அறிக்கை நாள் | : | 23.08.2021 |
| 6. | எதிரிகளை கைது செய்த நாள் | : | எதிரி 1 = 04.10.2019<br>எதிரி 2= 19.10.2019<br>எதிரி 3=13.05.2021<br>எதிரி 4=10.08.2019<br>எதிரி 5= 20.09.2019 |
| 7. | எதிரிகளை பிணையில் சென்ற நாள் | : | இவ்வழக்கின் 1வது எதிரி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற சிஎம்பி எண். 1479/2019, 16.10.2019ன் உத்தரவின் படி 04.10.2019 சரணடைந்து முன் பிணையில் சென்றுள்ளார். 2,3,4 எதிரிகள் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்ற சிஎம்பி எண். 4800/19 நாள் 19.10.2019 ன் படியும் சிஎம்பி எண். 94/2021 நாள் 13.05.2021ன் உத்தவின் படியும், 4ம் எதிரி 10.08.2021 அன்று கைது செய்யப்பட்டு சிம்பி எண். 3548/21 நாள் 19.08.2021ன் படியும் 5ம் |

| | | | |
|---|---|---|---|
| | | | எதிரி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற சிஎம்பி எண். 13237/2019 நாள் 01.10.2019ன் உத்தரவின் படி 20.09.2019 சரணடைந்து முன்பிணையில் சென்றுள்ளார். |
| 8. | எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | 1வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 325, 323, 307, 506(1) ன் படியும், 2 முதல் 5 எதிரிகள் மீதுஇ.த.ச. பிரிவுகள். 147, 294(பி), 325 உ/இ. 149, 323, 307, 506(1) –ன் படியும், |
| 9. | எதிரிகளின் பதில்கள் | : | குற்றவாளிகள் இல்லை. |
| 10. | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | : | 02.04.2025 |
| 11. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | : | 08.04.2026 |
| 12. | கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b) கேட்கப்பட்ட நாள் | : | 03.06.2026 |
| 13. | தீர்ப்பு நாள் | : | 17.06.2026 |
| 14. | நீதிமன்றத்தின் தீர்மானம் | : | 1வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 325, 323, 307, 506(1) ன் படியும், 2 முதல் 5 எதிரிகள் மீதுஇ.த.ச. பிரிவுகள். 147, 294(பி), 325 உ/இ. 149, 323, 307, 506(1) –ன் படியும் தண்டிக்கத்தக்க குற்றவாளிகள் இல்லை. |
| 15. | தீர்ப்பின் சுருக்கம் | : | **முடிவாக** 1வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 325, 323, 307, 506(1) ன் படியும், 2 முதல் 5 எதிரிகள் மீதுஇ.த.ச. |

| | | | |
|---|---|---|---|
| | | | பிரிவுகள். 147, 294(பி), 325 உ/இ. 149, 323, 307, 506(1) –ன் படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.<br><br>இவ்வழக்கில் தடயப்பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. |
| 16. | தீர்ப்பின் நகல் எதிரிகளுக்கு வழங்கப்பட்ட நாள் | : | இவ்வழக்கைப் பொறுத்து எதிரிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளதால் தீர்ப்புரை நகல் வழங்கப்படவில்லை. |
| 17. | காலதாமதத்திற்கான காரணம் | : | இல்லை. |

இவ்வழக்கானது முதலில் பத்மநாபபுரம் நீதித்துறை நடுவர் எண்.I நீதிமன்றத்தில் முதல் விசாரணை பதிவேட்டு வழக்கு எண்.21/2021 ஆக 08.10.2021 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு, பின்னர் மாண்புமிகு கன்னியாகுமரி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டு, முதன்மை அமர்வு நீதிமன்றம் கோப்பிற்கு எடுத்து இந்நீதிமன்ற விசாரணைக்காக மாற்றப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது 05.04.2022–ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 03.06.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு

வந்தபோது, அரசுக்காக கற்றறிந்த கூடுதல் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு. T. மைக்கேல் ரதீஸ் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஆன்றோ கிளிட்டஸ் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், அரசுத்தரப்பு சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையின்கீழ் இருந்துவந்த இவ்வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது, திருவட்டார் காவல்நிலைய ஆய்வாளரால் எதிரிக்கு எதிராக இ.த.ச. பிரிவுகள். 147,294(பி), 323, 325, 307,506(1) –ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்** :

25.08.2019ம் தேதிக்கு ஒரு வருடத்திற்கு முன்பு ஐந்து எதிரிகளும் காயம்பட்ட அஜின் என்பவரும் சேர்ந்து மது அருந்தியதில் அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டு அதன் காரணமாக அஜின் மீது ஐந்து எதிரிகளுக்கும் முன்விரோதம் ஏற்பட்டதாகவும், ஐந்து எதிரிகளும் ஒன்று சேர்ந்து காயம்பட்ட அஜினை மீண்டும் மது அருந்த ரகசியமாக அழைத்து வந்து கொலை செய்ய வேண்டுமென்ற திட்டம் போட்டுள்ளதாகவும், கடந்த 25.08.2019ம் தேதி இரவு 8.00 மணியளவில் காயமடைந்த சாட்சி 2 அஜின் தனது வீட்டில் இருக்கும் போது ஐந்து எதிரிகளும் முளகுமூடு கலையன்விளை சானல் பக்கம் நின்று கொண்டு 1ம் எதிரி காயம்பட்ட அஜினுக்கு போன் பண்ணி முளகுமூடு கலையன் விளை சானல் பக்கம் வந்தால் நாம் அனைவரும் ஒன்றாக மது அருந்தலாம் என்று ஏமாற்றி கூறிவிட்டு மீண்டும் பண்டாரவிளையில் உள்ள அஜினின் வீட்டுக்கு சென்று அஜினை சானல்பக்கம் அழைத்து சென்று அங்கு வைத்து ஐந்து எதிரிகளும் அஜினும் மது அருந்தி இரவு 11.00 மணி வரைக்கும் அங்கேயே இருந்துள்ளதாகவும் அஜினுக்கு அதிக மதுவை கொடுத்ததாகவும் அஜின் எழும்பி வீட்டுக்கு போக எத்தனித்ததும் ஐந்து எதிரிகளும் தள்ளையழி, புண்டாமவனே என்று அசிங்கமாகவும் அருவருப்பாகவும் கெட்ட வார்த்தைகள் பேசி தாக்க

முற்பட்டதாகவும் தப்பி ஓட முயற்சித்த அஜினை எதிரிகள் போகவிடாமல் தடுத்து நிறுத்தி 1ம் எதிரி ஒரு கம்பி எடுத்து அஜினின் வலது கண் மூக்கோடு சேர்ந்த பகுதியின் எலும்பை உடைத்து காயங்கள் ஏற்படுத்தியும், கண்ணில் பலத்த ரத்தகட்டு உண்டு பண்ணியும் 3ம் எதிரி அஜினின் நெஞ்சில் ஓங்கி கையால் அடித்தும் 2ம் எதிரி அஜினின் பின்பக்க இடுப்பில் காலால் மிதித்து காயப்படுத்தியும் 4, 5 எதிரிகள் கைகளால் இடது தோள்பட்டை மற்றும் முதுகிலும் ஓங்கி அடிக்க வீக்க காயங்கள் ஏற்படுத்தியும் ஐந்து எதிரிகள் மீண்டும் இவனை கொல்லாமல்விடக்கூடாது என சொல்லி காலை தட்டி கீழே போட்டு கால்களால் மிதித்து காயப்படுத்தியும், ஐந்து பேரும் இதோடு செத்து தொலைந்து போ இனி நீ உயிர் வாழக்கூடாது என்று சொல்லி அஜினை தூக்கி 7 அடி ஆழம் உள்ள தண்ணீர் இல்லாத சானலின் உள்பகுதியில் தூக்கி போட்டு அஜினுக்கு வலது பக்க காதோடு சேர்ந்த தலையில் ரத்தக்காயம் ஏற்படுத்தி கொலை செய்ய முயற்சித்துள்ளதாகவும் அப்போது அங்கு வந்த சம்பவத்தை பார்த்த சாட்சிகள் ராஜேஷ், ஜினோ, ஜிபின் ஆகியோர்கள் ஓடி வந்து தடுக்க வரவும் ஐந்து எதிரிகளும் அஜினை பார்த்து என்னைக்காவது ஒரு நாள் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டிய க குற்றத்திற்காக எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள். 147,294(பி), 323, 325, 307,506(1) –ன்கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக திருவட்டார் காவல் நிலைய ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இவ்வழக்கின் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் பத்மநாபபுரம் நீதித்துறை நடுவர் எண்.I நீதிமன்றத்தில் ஆஜரானதும் வழக்கு ஆவணங்களின் நகல்கள் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு கு.வி.மு.ச. பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4) இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டுகள் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால், வழக்கு மாண்புமிகு கன்னியாகுமரி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, பின்னர் இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

5) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, மேற்படி குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம் புரிந்துள்ளதாக அனுமானிக்கப்பட்டு போதிய ஆதாரங்கள் இருப்பதாகக் கருதி, இவ்வழக்கின் வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 325, 323, 307, 506(1) ன் படியும், 2 முதல் 5 எதிரிகள் மீதுஇ.த.ச. பிரிவுகள். 147, 294(பி), 325 உ/இ. 149, 323, 307, 506(1) –ன் படியான குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு விளக்கி வினவியபொழுது, குற்றம் சாட்டப்பட்டவர்கள் பொய் வழக்கு என மறுத்துரைத்தார்கள்.

6) குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றத்தை மறுத்துரைத்ததால் வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, அரசுத்தரப்பில் சாட்சிகள் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் 6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், சா.பொ. குறியீடு இல்லை.

**7) <u>அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரிய வரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் :</u>**

அ.சா.1 ராணி தனது சாட்சியத்தில் தனது மகன் பெயர் அஜின் என்றும், 1வது எதிரி ஒய்சிலினை தெரியும் என்றும், 2, 3, 5 எதிரிகளை தெரியாது என்றும், 4வது எதிரியை தெரியும் என்றும், சுமார் 6 வருடங்களுக்கு முன்னர் இரவு 08.00 மணிக்கு ஒய்சிலின் தனது மகனை தொலைபேசி மூலம் அழைத்ததாகவும், 11.00 மணிக்கு ஜினோ தன் மகனை அழைத்து வந்ததாகவும், தன் மகனுக்கு காயங்கள் இருந்ததாகவும், தனது மகனுக்கு முகத்தில் காயங்கள் இருந்ததாகவும், 3 நாட்கள் கழித்து தன் மகனுக்கு உடல்நிலை மோசமானதால் தக்கலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்ததாகவும், அங்கிருந்து ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பியதாகவும் தான் போலீசாரிடம் புகார் மனு கொடுத்ததாகவும், தன்னிடம் ஜினோ சொன்ன தகவல்களை வைத்து தான் போலீசாரிடம் புகார் மனு

கொடுத்ததாகவும், அந்த புகார் மனு தன்னிடம் காட்டப்படுவது தான் என்றும், அது அ.சா.ஆ.1 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8. அ.சா.6 டாக்டர் ,திரு. ஷாஜி தனது சாட்சியத்தில், 28.08.2019ம் தேதி காலை 06.35 மணிக்கு தான் பணியில் இருந்த போது காட்டுவிளை, பண்டாரகாலணியை சேர்ந்த ராமகிருஷ்ணன் மகன் அஜின் (27) என்பவரை அவரது தாய் அரை மயக்க நிலையில் வாந்தியுடன் அழைத்து வந்ததாகவும், என்ன நடந்தது என்று கேட்ட போது 26.08.2019ம் தேதி அன்று காலை 06.00 மணிக்கு காட்டாத்துறையில் இருசக்கர வாகனத்திலிருந்து போதையில் விழுந்திருக்கலாம் என்று கூறியதாகவும் என்ன நடந்தது என்று சரியாக தெரியவில்லை என்றும் கூறியதாகவும் தான் நோயாளியை பரிசோதனை செய்து வலது கண் பக்கமாக ரத்தக்கசிவு இருந்ததை கண்டதாகவும், முதலுதவி சிகிச்சை அளித்து ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததாகவும், 09.09.2019ம் தேதி அஜின் சிகிச்சை முடித்து வீட்டிற்கு சென்றுள்ளதாகவும் அஜினின் மருத்துவ சிகிச்சை சான்று கிடைக்க பெற்று வலது கண் மூக்கோடு சேர்ந்த காயம் கொடுங்காயம் என சான்று வழங்கியதாகவும் அந்த காயச்சான்று அ.சா.ஆ.2 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

9. அ.சா.7 ஜெயசிங் தனது சாட்சியத்தில், 29.08.2019ம் தேதி மேற்படி காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றிய போது 29.08.2019ம் தேதி தக்கலை காவல்நிலையத்திலிருந்து கிடைத்த தகவலை பெற்று ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் கிசிச்சையில் இருந்த ராமகிருஷ்ணன் மகன் அஜின் என்பவர் பேசமுடியாத நிலையில் இருந்ததால் அவரது தாயார் ராணி என்பவரை விசாரித்து புகார் மனுவை பெற்று நிலையம் வந்து அதன் தன்மைபடி நிலைய குற்ற எண். 279/2019 பிரிவுகள் 147, 294(பி), 323, 307 506(1) இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 பதிவு செய்து அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

10. அ.சா.10 திரு. ஷேக் அப்துல் காதர் தனது சாட்சியத்தில் இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றியபோது தலைமைக்காவலர் திரு. ஜெயசிங் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த நிலைய குற்ற எண். 279/2019 பிரிவுகள் 147, 294(பி), 323, 307, 506(1) இ.த.ச படியான வழக்கை எனக்கு முந்தைய காவல் ஆய்வார் திரு. ராஜசுந்தர் என்பவர் விசாரணைக்கு எடுத்து கொண்டு 29.08.2019ம் தேதி இரவு 08.15 மணிக்கு சம்பவ இடம் சென்று பார்வையிட்டு பார்வை மகஜர் அ.சா.ஆ.4, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 தயார் செய்ததாகவும், பின்னர் சாட்சிகள் ராணி, அஜின் ரமேஷ், ஜிபின், ஜினோ, பிரதீஷ், செல்வராஜ், ஆகியவர்களையும் பார்வை மகஜர் சாட்சிகளையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், அவர் பணிமாறுதலில் சென்று விட்ட படியால் பின்னர் பொறுப்பேற்ற தான் இவ்வழக்கு கோப்பை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் 4வது எதிரியான வினுவை 10.08.2021ம் தேதி காலை 06.00 மணிக்கு கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், காயம்பட்ட சாட்சி–2க்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் திரு. ஷாஜி அவர்களை 23.08.2021ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பதிவு செய்ததாகவும், வழக்கு பதிவு செய்த தலைமைக்காவலரை விசாரித்து வாக்குமூல் பதிவு செய்ததாகவும் பின்னர் 23.08.2021ம் தேதி வழக்கு விசாரணையிலிருந்து இவ்வழக்கின் சட்ட பிரிவை 147, 294(பி), 323, 307, 506(1) இ.த.ச படியான வழக்கை பிரிவு 325, 149, 147, 323, 506(1), 307இ 294(பி), இ.த.ச– வாக சட்ட பிரிவை மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

11. (அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2, அ.சா.3, அ.சா.4, அ.சா.5 அ.சா.8, அ.சா.9 அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சிகளாகியுள்ளார்கள்.)

12, அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகள் குறித்து கு.வி.மு.ச. 313(1)(ஆ)–ன் படி

வினவியபோது குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் சாட்சிகளின் சாட்சியத்தினை பொய் சாட்சி, பொய் வழக்கு என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சி எதுவும் இல்லை என்றும் கூறினார்கள்.

13, இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், அரசுத்தரப்பில் எதிரிமீது இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட படியிலான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

14. **<u>பிரச்சனைக்கான தீர்வு:</u>**

புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், சுமார் 6 வருடங்களுக்கு முன்னர் இரவு 08.00 மணிக்கு ஒய்சிலின் தனது மகனை தொலைபேசி மூலம் அழைத்ததாகவும், 11.00 மணிக்கு ஜினோ தன் மகனை அழைத்து வந்ததாகவும், தன் மகனுக்கு காயங்கள் இருந்ததாகவும், தனது மகனுக்கு முகத்தில் காயங்கள் இருந்ததாகவும், 3 நாட்கள் கழித்து தன் மகனுக்கு உடல்நிலை மோசமானதால் தக்கலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்ததாகவும், அங்கிருந்து ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பியதாகவும் தான் போலீசாரிடம் புகார் மனு கொடுத்ததாகவும், தன்னிடம் ஜினோ சொன்ன தகவல்களை வைத்து தான் போலீசாரிடம் புகார் மனு கொடுத்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார். குறுக்கு விசாரணையில் புகார் மனுவில் என்ன எழுதப்பட்டிருந்து என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 வழக்கு சம்பவத்தை கண்ணால் கண்ட சாட்சியாக இல்லை. ஜினோ சொன்ன தகவல்களை வைத்து தான் போலீசாரிடம் புகார் மனு கொடுத்துள்ளார் என்பது தெரிய வருகிறது. அ.சா.2 தனது சாட்சியத்தில் யார் என்று தெரியாத நபர்கள் தன்னை அடித்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2ம் பிறழ்சாட்சியாக மாறிவிட்டார். கண்ணால் கண்ட சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில், இந்த வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். கண்ணால் கண்ட சாட்சி அ.சா.4 தனது சாட்சியத்தில் சம்பவம் நடக்கும் போது தான் ஊரில் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4ம் பிறழ்சாட்சியாக மாறிவிட்டார். கண்ணால் கண்ட சாட்சி

அ.சா.5 இந்த வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். கண்ணால் கண்ட சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 முதல் அ.சா.5 வரையிலானர்கள் அரசுத்தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

15. இந்நிலையில், காயம்பட்ட அ.சா.2க்கு சிகிச்சை வழங்கிய அ.சா.6 மருத்துவர் தனது சாட்சியத்தில் அஜின் இரு சக்கரவாகனத்திலிருந்து போதையில் விழுந்திருக்கலாம் என்று கூறியதாகவும் என்ன நடந்தது என்று தனக்கு சரியாக தெரியவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். பார்வை மகஜர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.8 முதல் அ.சா.9 தங்களது சாட்சியத்தில் தங்களிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் தங்களுடையது இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்கள்.

16. கண்ணால் கண்ட சாட்சிகள், பார்வைமகஜர் சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதவாக சாட்சியம் எதையும் முன்னிடாமல் பிறழ்சாட்சியாக்கப்பட்டுள்ளார்கள்.

17. இந்த வழக்கில் எதிரிகள் அரசு தரப்பில் சொல்லப்பட்டுள்ளதை போல குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார்கள் எனக் கூறுவதற்கு எந்த விதமான கண்ணுற்ற சாட்சியமும் இல்லை. அவ்வாறான நிலையில் புலன் விசாரணை அதிகாரிகளான அ.சா.7, 10 ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை மேம்படுத்துவதாகவோ அரசு தரப்பில் சொல்லப்படுவதை போல வழக்கு சம்பவத்தில் எதிரிகள் ஈடுபட்டார்கள் என்பதை நிரூபிக்கக் கூடியதாகவோ அமையாது.

18. எனவே இந்த வழக்கில் வழக்கு சம்பவத்தில் எதிரிகள் ஈடுபட்டுள்ளார் என்பதை நிரூபிக்கக் கூடிய சாட்சியங்கள் எதுவும் இல்லை என்பதால் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக** 1வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 325, 323, 307, 506(1) ன் படியும், 2 முதல் 5 எதிரிகள் மீதுஇ.த.ச. பிரிவுகள். 147, 294(பி), 325 உ/இ. 149, 323, 307, 506(1) –ன் படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இவ்வழக்கில் தடயப்பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தரிடம் நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் 2026–ஆம் ஆண்டு ஜூன் 17–ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

K MARIAPPAN
Digitally signed by K MARIAPPAN
Date: 2026.06.24 16:04:33 +0530

உதவி அமர்வு நீதிபதி,

பத்மநாபபுரம்

(i) <u>அரசுத்தரப்பு சாட்சிகள் :</u>

| | | |
|---|---|---|
| அ.சா.1 | .. | திருமதி. ராணி |
| அ.சா.2 | .. | திரு. அஜின் |
| அ.சா.3 | .. | திரு. ஜிபின் |
| அ.சா.4 | .. | திரு. ராஜேஸ் |
| அ.சா.5 | .. | திரு. ஜினோ |
| அ.சா.6 | .. | டாக்டர். திரு. ஷாஜி |
| அ.சா.7 | .. | திரு. ஜெயசிங் |
| அ.சா.8 | ... | திரு. ராபின்சன் |

அ.சா.9 ... திரு. ஜாண்வெஸ்லி

அ.சா.10 ... திரு. ஹரிகிருஷ்ணன்

**(ii) <u>எதிரி தரப்பு சாட்சிகள் :</u>** இல்லை.

**(iii) <u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள் :</u>**

அ.சா.ஆ.1 ... புகார் மனு

அ.சா.ஆ.2 ... காயச்சான்று

அ.சா.ஆ.3 ... முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.4 ... பார்வை மகஜர்

அ.சா.ஆ.5 ... மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.6 ... சட்ட மாறுதல் அறிக்கை

**(iv) <u>எதிரி தரப்பு சான்றாவணங்கள் :</u>** இல்லை.

**(v) <u>அரசுத்தரப்பு சான்றுப்பொருட்கள் :</u>**

இல்லை

K MARIAPPAN Digitally signed by K MARIAPPAN Date: 2026.06.24 16:04:41 +0530

உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி,

பத்மனாபபுரம்